S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 339 01.06.2026 MONDAY VAIKASI : 18 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 339 01.06.2026 திங்கள்கிழமை வைகாசி : 18 விலை : ரூ.5/-

## வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க

# "முதல்வர் விஜய் இன்று திருச்சி வருகை"



## தேர்தலுக்குப் பின் சொந்த தொகுதிக்கு வந்த இபிஎஸ்: 50க்கும் மேற்பட்ட தவெகவினர் அதிமுகவில் இணைந்தனர்

சென்னை, ஜூன்.1-

சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்றதற்கு பிறகு முதல்முறையாக எடப்பாடி தொகுதிக்கு வந்த அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி முன்னிலையில் தங்களை கட்சியில் இணைந்துக் கொண்டனர்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நெடுஞ்சாலை நகரில் உள்ள வீட்டில் இருந்து புறப்பட்டு சொந்த தொகுதியான எடப்பாடிக்கு தேர்தலில் வெற்றி பெற்று, 28 நாட்களுக்கு பிறகு முதல் முறையாக இன்று வந்தார். அவருக்கு, கட்சி நிர்வாகிகள் பட்டாசு வெடித்து, மலர் தூவி உற்சாகமாக வரவேற்றனர்.

முன்னதாக, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதியில் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து, உற்சாக வரவேற்பு அளித்த நிர்வாகிகளுக்கு அவர் நன்றி தெரிவித்தார். எடப்பாடி தொகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட்ட ஒன்றிய, நகர, பேரூர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை சேர்ந்த கட்சி நிர்வாகிகளுடன் பயணியர் மாளிகையில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஆலோசனையில் ஈடுபட்டார்.

அப்போது, ஒவ்வொரு வாக்குச்சாவடிகளில் பெற்ற வாக்குகள் குறித்தும், நிர்வாகிகள் செயல்பாடுகள் குறித்தும் நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். தொடர்ந்து, அவர் நிர்வாகிகளுடன் புகைப்படமும் எடுத்து கொண்டார். பின்னர், பல்லடம் தொகுதி முன்னாள் எம்எல்ஏ நடராஜன், அவரது ஆதரவாளர்களுடன் வந்து பழனிசாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். தொடர்ந்து, தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி முன்னிலையில் தங்களை கட்சியில் இணைந்து கொண்டனர்.

திருச்சி, ஜூன்.1-

திருச்சி கிழக்கு தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக, தவெக தலைவரும், முதல்வருமான விஜய் இன்று (ஜூன் 1) திருச்சி வருகிறார். தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தலைவர் விஜய் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார். இதையடுத்து அவர், பெரம்பூர் தொகுதியை வைத்துக் கொண்டு, திருச்சி கிழக்குத் தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக முதல்வர் விஜய் இன்று (ஜூன் 1) திருச்சி வருகிறார்.



இதுகுறித்து தவெக டெல்டா மண்டல பொறுப்பாளரும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைவருமான கு.ப.கிருஷ்ணன் திருச்சியில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியது: தவெக தலைவர் விஜய், தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக திருச்சி வருகை தருகிறார்.

இதற்காக சென்னையிலிருந்து தனி விமானத்தில் திருச்சி விமான நிலையம் வரும் முதல்வர், அங்கிருந்து டிவிஎஸ் டோல்கேட், பழைய பால்பண்ணை, சஞ்சீவி நகர், சத்திரம் பேருந்து நிலையம் வழியாக தனியார் கல்லூரி வளாகத்துக்கு வருகிறார். பின்னர், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் மாலை 4 மணியளவில் பொதுமக்கள் மத்தியில் நன்றி தெரிவித்துப் பேசுகிறார். இந்த நிகழ்வைத் தொடர்ந்து தமிழகத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் செல்ல இருக்கிறார். முதல்வர் விமான நிலையத்திலிருந்து விழா நடை



பெறும் இடத்துக்கு வாகனத்தில் வரும்போது, அவரது வாகனத்தை யாரும் பின் தொடர வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது, பேரவைத் துணைத்தலைவர் எம்.ரவிசங்கர் உடன் இருந்தார். திருச்சி வரும் முதல்வர் விஜய்க்கு, திருச்சி விமான நிலையத்திலிருந்து கூட்டம் நடைபெறும் இடம்வரை சாலையின் இருபுறங்களிலும் வரவேற்பு அளிக்க தவெகவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## "விஜய் வீடு தேடி வந்து எனக்கு துணை முதல்வர் பதவி கொடுத்திருப்பார்" பிரேமலதா பேச்சு

சென்னை, ஜூன்.1-

"இப்போது அமைச்சர் பதவிக்கு எல்லோரும் ஓடுகிறார்கள். நான் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், விஜய்யே வீடு தேடிவந்து எனக்கு துணை முதல்வர் பதவி கொடுத்திருப்பார். இதுதான் உண்மை" என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

தேமுதிக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா, "இந்த தேர்தலில் தேமுதிக மாவட்டச் செயலாளர்கள் விரும்பிய கூட்டணியை அமைத்தோம். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தல், ஒரு மாயையை உருவாக்கி ஒரு சுனாமி போல அமைந்தது. தேர்தலில் வெற்றி தோல்விகள் சகஜம், மாற்றம் ஒன்றே மாறாதது.

மக்களும், இளைஞர்களும் இந்தத் தேர்தலில் ஒரு முடிவை எடுத்தனர். இன்று அன்றாடம் நடக்கும் பல விஷயங்கள் தமிழக மக்கள், பெண்கள், இளைஞர்களை சிந்திக்க வைத்துள்ளது. இன்று தமிழ்நாட்டில் நடக்கும் அவலங்களை பட்டியலிட்டால் ஒரு நாள் போதாது. தவெக ஆட்சிக்கு வந்த வெகு சிறிய காலத்திலேயே தமிழகம் முழுவதும் பல்வேறு பிரச்சினைகளை மக்கள் சந்தித்துக் கொண்டுள்ளனர். இதற்கான தீர்வை தமிழக அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

நாம் மதசார்பற்ற ஜனநாயக கூட்டணியில் இருக்கிறோம். இன்று இந்தக் கூட்டணியில் இருந்த கட்சிகளின் ஆதரவை பெற்றே ஆட்சி நடக்கிறது. யாரை தீய சக்தி எனச் சொன்னார்களோ, அந்த 'தீய சக்தியின்' ஆதரவோடு தான் 'தூய சக்தி' எனச் சொன்னவர்கள் ஆட்சியமைத்துள்ளனர்.



இதனையும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் உள்ளனர்.

என்னவெல்லாம் வாக்குறுதிகள் கொடுத்து தவெக ஆட்சிக்கு வந்தது என்பது மக்களுக்கு தெரியும். ஒரு புதிய கட்சியின் ஆட்சிக்கு 6 மாத கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இன்று மக்கள் பெரிய அளவில் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதே கள நிலவரம். பாலியல் குற்றங்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், மேகேதாட்டு விவகாரம், மின்வெட்டு, விவசாயிகள் பயிர்க்கடன் தள்ளுபடிக்காக போராட்டங்கள் இன்று மாநிலம் முழுவதும் நடக்கிறது.

தேமுதிக என்றால் பேரம், பேரம் என்றார்கள். எந்த பேரத்துக்கும், எந்த பதவிக்கும் ஆசைப்படாத ஒரே கட்சி தேமுதிக தான். வேறு குற்றம் சொல்ல முடியாததால், பேரம் பேரம் என ஒரு புனிதமான கட்சியை களங்கப்படுத்தினார்கள். பதவிக்கோ, பணத்துக்கோ, சோஃபா செட்டுக்கோ ஆசைப்படாமல், நாம் பயணிக்கும் கூட்டணிக்கு விசுவாசமாக, தர்மத்தோடு உண்மையாக இருக்கிறோம்.

நான் நினைத்திருந்தால், விஜய்யை சந்திக்க என்னால் முடியாதா?. அமைச்சர் பதவிக்கு எல்லோரும் ஓடுகிறார்கள். நான் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், விஜய்யே வீடு தேடிவந்து எனக்கு துணை முதல்வர் பதவியே கொடுத்திருப்பார். இதுதான் உண்மை. ஆனால் இதற்கெல்லாம் ஆசைப்படும் கட்சியில்லை தேமுதிக. என்றும் கொண்ட கொள்கைக்கும், கூட்டணி தர்மத்துக்கும் உண்மையாக இருக்கும் கட்சி தேமுதிக.

2024 மக்களவைத் தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு யார் துணை நின்றார்கள். அன்று எல்லோரும் உங்களை விட்டு ஓடியபோது, உங்களை மதித்து நின்ற ஒரே கட்சி தேமுதிகதான். ஏன் அப்போது தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய எங்களுக்கு தெரியாதா?.

2024ல் எடப்பாடி பழனிசாமியை விட்டு ஓடியவர்களை எல்லாம், 2026 தேர்தலுக்காக அழைத்து ஆலோசனை நடத்தினார். ஆனால், 2024ல் உறுதுணையாக நின்ற எங்களை மதித்து அழைத்துப் பேசினாரா?. கூட்டணியை வலுப்படுத்த ஒருங்கிணைந்து போராட்டங்களை, மாநாடுகளை நடத்த வேண்டும் என பழனிசாமியிடம் பல முறை வேண்டுகோள் விடுத்தேன். அதனை அவர் கடைசிவரை கேட்கவே இல்லை.

நாங்கள் ஏதோ எம்.பி சீட்டுக்காக கூட்டணி மாறியதாக சொல்லலாம். ஆனால், அதிமுக கூறிய வார்த்தையை காப்பாற்றாமல், எங்களை மதிக்காத காரணத்தால் கூட்டணியை விட்டு வெளியேறினோம். பிரச்சாரத்தில் அரை சதவீத கட்சி, ஐசியுவில் உள்ள கட்சி என எங்களை பழனிசாமி விமர்சித்தார். ஆனால், இன்று அதே நிலை அந்தக் கட்சிக்கே வந்துவிட்டது. தேமுதிக கூட்டணியில் இருந்து வெளியேறக்கூடாது என அதிமுகவினர் அனைவரும் நினைத்தனர். நம்மை பழனிசாமி குறைத்து மதிப்பிட்டார். அதன் விளைவாக 15 ஆண்டுகளாக பழனிசாமி இருந்த அரசு இல்லத்தை கூட காலி செய்யும் நிலை வந்துவிட்டது. இன்று அதிமுக ஐசியுவுக்கு சென்றுவிட்டது.

2011ல் 29 இடங்களில் வென்ற பிறகு சட்டப்பேரவையில் விஜயகாந்த் மக்களுக்காக பேசினார். அதனை தனிப்பட்ட வெறுப்பாக மாற்றி நம் எம்எல்ஏக்களை விலைபேசி அதிமுகவுக்கு கொண்டு சென்றனர். அன்று தேமுதிகவுக்கு அதிமுகவால் நடந்த கொடுமை, இன்று தவெக மூலமாக அதிமுகவுக்கு வந்துள்ளது. இப்போது கூட அதிமுகவில் 3 எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்வதாக தகவல்கள் வெளியாகின்றன. அரசியலில் அங்கும், இங்கும் என தாவுபவர்களுக்கு எதிர்காலம் கிடையாது" என்று தெரிவித்தார்.



## தமிழக ஆசிரியருக்கு பிரதமர் மோடி பாராட்டு

**புதுடில்லி: ஜூன்.1–**

தமிழகத்தை சேர்ந்த ஆசிரியர் கிரிஜாவை மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டினார்.

அவர் கூறியதாவது: சமீபத்தில் தமிழகத்தின் நாகர்கோவிலில், நான் ஒரு ஆசிரியரைச் சந்தித்தேன். அவரை நான் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்பும் சந்தித்திருந்தேன். நான் குறிப்பிடுவது கிரிஜா அம்மாவைத்தான். இந்தச் சந்திப்பின்போது, பல இளம் மாணவர்களும் அவருடன் உடனிருந்தனர். கிரிஜா அம்மா ஏறக்குறைய 15 பள்ளிகளை நிர்வகித்து வருகிறார்.

அவற்றுள், சென்னையில் அமைந்துள்ள ஒரு பள்ளி முதன்மையான கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது. அவரது தேசபக்தி உணர்வு, ஒவ்வொரு இந்தியருக்கும் உண்மையிலேயே ஊக்கமளிப்பதாக உள்ளது. மன் கி பாத் நிகழ்ச்சியிலிருந்து உத்வேகம் பெற்ற கிரிஜா அம்மா, நாட்டின் வீரர்களின் நலனுக்காகத் தானும் பங்களிக்க வேண்டும் என்று உறுதியேற்றார். அந்த நோக்கத்தை முன்னிட்டு, தனது பள்ளிகள் அனைத்திலும் பயிலும் மாணவர்களை இதில் பங்கேற்குமாறு அவர் ஊக்கப்படுத்தினார்.

ஒவ்வொரு குழந்தையும் தினமும் ஒரு ரூபாய் வீதம் பங்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஓராண்டு காலத்தில், ஒவ்வொரு மாணவரும் 365 ரூபாயைப் பங்களித்தனர். இத்தகைய சிறிய முயற்சியால் ஏறக்குறைய 40 லட்சம் ரூபாய் திரட்டப்பட்டது. இந்த முழுத் தொகைக்குமான காசோலை ஒன்றை, கிரிஜா அம்மா என்னிடம் ஒப்படைத்தார். அவருடன் நான் உரையாடியபோதுதான், இந்தியா மீது அவருக்குள்ள பக்தி எவ்வளவு பெரியது என்பதை நான் உணர்ந்துகொண்டேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# கடற்கரை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தட மின்சார ரயில் இயக்கத்தில் புதிய கால அட்டவணை



சென்னை: ஜூன்.1–

சென்னை கடற்கரை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் மின்சார ரயில்கள் இயக்கத்தில் புதிய கால அட்டவணை (ஜூன் 1) முதல் அமல்படுத்தப்படுகிறது. சென்னை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் புதிய கால அட்டவணை ஜூன் 1ம் தேதி (நாளை) முதல் அமல்படுத்தப்பட உள்ளது. தற்போது இயக்கப்படும் 212 மின்சார ரயில்களின் சேவை அப்படியே தொடரும். ஆனால், ரயில்களின் இயக்கும் நேரத்தில் மட்டும் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: சென்னை தாம்பரம், செங்கல்பட்டு, திருமால்பூர் வழித்தடத்தில், புதிய கால அட்ட வணைப்படி, அலுவலக நாட்களில் 212 மின்சார ரயில்களும், விடுமுறை நாட்களில் 190க்கும் மேற்பட்ட மின்சார ரயில்களும் இயக்கப்படும். இயக்ககக் காரணம் மற்றும் எழும்பூர் ரயில் நிலைய மறு சீரமைப்பு பணி ஆகியவை காரணமாக, இந்த புதிய கால அட்டவணை அமல்படுத்தப்பட உள்ளது.

மேலும், பயணிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, நெரிசல் மிகுந்த நேரங்களில் (பீக் அவர்ஸ்) இடைவெளி நேரம் குறைக்கப்பட்டுள்ளது. மற்ற நேரங்களில் 15 நிமிட இடைவெளியில் இயக்கும் வகையில் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர். இதுகுறித்து, புறநகர் மின்சார ரயில் பயணிகள் கூறும் போது, "செங்கல்பட்டு தாம்பரம் கிண்டி கடற்கரை வரை காலை வேளையில் அதாவது பீக் அவர்ஸில் இயக்கப்படும் மின்சார ரயில்கள் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், போதிய மின்சார ரயில் சேவை கிடைக்காமல், பணிக்கு செல்லும் பயணிகள் பாதிக்கப்படு வார்கள். சென்னை புறநகரில் மின்சார ரயில்களின் தேவை பல மடங்கு அதிகரித்து வருகிறது. இந்த அட்டவணையில் கூடுதல் ரயில்கள் இல்லாதது, ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றனர்.

# வடபழனி முருகன் கோயிலில் திருக்கல்யாண உற்சவம் கோலாகலம் ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



சென்னை: ஜூன்.1–

வடபழனி முருகன் கோயிலில் வைகாசி விசாக பிரம்மோற்சவ விழாவையொட்டி கோலாகலமாக நடைபெற்ற திருக்கல்யாண உற்சவத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். சென்னை வடபழனி முருகன் கோயிலில் இந்த ஆண்டுக்கான வைகாசி விசாக பிரம்மோற்சவத் திருவிழா, கடந்த 21ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 10 நாட்கள் நடைபெற்ற விழாவில் நாள்தோறும் வடபழனி ஆண்டவருக்கு பல வகையான அலங்காரங்கள் செய்யப்பட்டு சிறப்பு அபிஷேகங்கள், பூஜைகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு நாளும் வாகன புறப்பாடும் விமரிசையாக நடைபெற்றன. முக்கிய நிகழ்வான தேரோட்டம், கடந்த 27ம் தேதி நடைபெற்றது. விழாவின் 10ம் நாளான (வைகாசி விசாகம்) நேற்று அதிகாலை 4 மணிக்கே கோயில் நடைதிறக்கப்பட்டு, பள்ளியறை பூஜைகள் நடந்தன. சுவாமிக்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரம் நடந்தன. காலை 8 மணி அளவில் வள்ளி, தேவசேனா சமேத சண்முகர் வீதி உலா நடைபெற்றது. அதைத்தொடர்ந்து தீர்த்த வாரி உற்சவம் நடந்தது. பின் யாக சாலை பூஜைகள் தொடங்கி, மகாபூர்ணஹுதி, கடப்புறப்பாடு, சுவாமிக்கு அபிஷேகம் நடந்தது. இரவு 7 மணி அளவில் விழாவின் முக்கிய அம்சமான திருக்கல்யாண உற்சவம் கோலாகலமாக தொடங்கியது. இதில் சீர்வரிசை தட்டு வைத்து, ஏஜமான சங்கல்ப நிகழ்வு நடந்தது. பின், கலச பூஜை நடத்தப்பட்டு சுவாமிக்கு பூணூல் மாற்றி காப்பு கட்டும் வைபவம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக யாக சாலை வளர்த்து ஹோமங்கள் நடத்தப்பட்டன. இதையடுத்து மாலை மாற்றுதல், பாலும் பழமும் வழங்கும் நிகழ்வு நடந்தது.

பின்னர் திருமாங்கல்ய பூஜை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு 'முருகனுக்கு அரோகரா' என்ற பக்தி முழக்கங்களுடன் சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து திருமாங்கல்ய தாரணம், பொரியிடுதல் நிகழ்வு தீபாராதனை நடந்தது. திருக்கல் மொய் எழுத பக்தர்கள் அழைக் யாண வைபவம் முடிந்ததும் கப்பட்டனர். பக்தர்கள் மொய் எழுதியதும் அதற்கான ரசீது மற்றும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. திருக்கல்யாணத்தை முன்னிட்டு வடபழனி ஆண்டவர் கோயில் அன்னதானக் கூடத்தில் பக்தர்களுக்கு வடை, பாயாசத் துடன் கல்யாண விருந்து வழங் கப்பட்டது. இதைத் தொடர்ந்து மயில்வாகனத்தில் புறப்பாடு நடந்தது. பின்னர் இரவு 9 மணி அளவில் கொடியிறக்கத்துடன் பிரம்மோற்சவ விழா நிறைவு பெற்றது.

# சிவகங்கையில் உணவு கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் முடக்கம்: வீணாகும் இயந்திரங்கள்



சென்னை: ஜூன்.1–

பிரதமர் மோடி பாராட்டிய சிவகங்கையில் உணவுக் கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் முடங்கியதால், அங்குள்ள பல லட்சம் ரூபாய் மதிப்பிலான இயந்திரங்கள் வீணாகி வருகின்றன. சிவகங்கை அருகே காஞ்சிரங்கால் கிராமத்தில் ரூர்பன் திட்டத்தின் கீழ் ரூ.66 லட்சத்தில் உணவுக் கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம் அப்போதைய மாவட்ட ஆட்சியர் மதுசூதன் ரெட்டி, ஊராட்சித் தலைவர் மணிமுத்து ஆகியோர் முயற்சியால் 2021 ஆகஸ்ட் 10ம் தேதி தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் நாளொன்றுக்கு 2 டன் உணவுக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்க முடியும். இதற்கு தேவையான காய்கறி, கோழி, மீன் ஆகிய உணவுக் கழிவுகளை காஞ்சிரங்கால் ஊராட்சி, சிவகங்கை நகராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து தினமும் சேகரித்து வந்தனர். பின்னர், அவற்றை அரைத்து நீரில் கலந்து அங்குள்ள கிடங்கில் ஊற்றினர். அவை மக்கி மீத்தேன் வாயுவாக மாறியது. அதன் மூலம், ஜெனரேட்டரை இயக்கி 220 கிலோ வாட் மின்சாரம் தயாரித்தனர். இதில் கிடைக்கும் மின்சாரத்தை காஞ்சிரங்காலில் உள்ள தெரு விளக்குகள், 4 பேட்டரி வாகனங்கள், அங்குள்ள மின் மோட்டார் போன்றவைக்கு பயன்படுத்தி வந்தனர். இதனால், ஊராட்சிக்கு பல ஆயிரம் ரூபாய் மின்கட்டணம் குறைந்தது. மேலும், 3 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்தது. இதையறிந்த பிரதமர் மோடி, 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் இத்திட்டத்தை பாராட்டினார். இந்த அமைப்பை ஏற் படுத்திய தனியார் நிறு வனமே 2023ம் ஆண்டு வரை பராமரித்து வந்தது. அதன் பின்னர், ஊராட்சி நிர்வாகமே மின்சாரம் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வந்தது.

6 மாதங்களுக்கு முன்பு இயந்திரம் பழுதடைந்ததால் திட்டம் முடங்கியது. இதனால் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான இயந்திரங்கள் வீணாகி வருகின்றன. பிரதமர் மோடி பாராட்டிய இத்திட்டத்தை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டுமென, அப்பகுதி மக்கள் வலியுறுத்தினர். இது குறித்து ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, 'உணவுக் கழிவு மூலம் மின்சாரம் தயாரிக்கும் அமைப்பை ஏற்படுத்திய தனியார் நிறுவனம் தான் இயந்திரத்தை பழுது நீக்க முடியும். அந்நிறுவனத்துடன் பேசி வருகிறோம். விரைவில் மீண்டும் செயல்பாட்டுக்கு வரும்' என்றனர்.

# "எனக்கு அமைச்சர் பதவி வேண்டாம்; பதவிக்காக அரசியலுக்கு வரவில்லை" ஜோஸ் சார்லஸ் மார்டின்



புதுச்சேரி: ஜூன்.1–

"எனக்கு அமைச்சர் பதவி வேண்டாம். பதவிக்காக நான் அரசியலுக்கு வரவில்லை. ஆனால், அமைச்சர்களை முதல்வர் விரைந்து நியமனம் செய்ய வேண்டும்" என்று லட்சிய ஜனநாயக கட்சியின் நிறுவனர் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் எம்எல்ஏ தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், "புதுச்சேரியில் அமைச்சர்கள் நியமனம், அவர்களுக்கு இலாகா ஒதுக்குவது தாமதமாகிக் கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மக்கள் வரிப்பணத்தில் தான் தேர்தலை நடத்தியுள்ளோம். எனக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டும் என்றும், அதற்காக ரூ.100 கோடி வரை பேரம் பேசப்படுகிறது என்றும் சில சர்ச்சைகள் வெளியே வந்தது. அமைச்சர்கள் நியமனம் செய்வது என்னாலோ அல்லது என்னைச் சார்ந்தவர்களாலோ தாமதம் ஏற்பட்டால் அந்த தாமதத்தை விலகச் செய்ய வேண்டும். எனக்கு எந்தப் பதவியும் வேண்டாம். நான் பதவிக்காக அரசியலுக்கு வரவில்லை. மக்களுக்கு சேவை செய்யவே வந்துள்ளேன். எம்எல்ஏவாக இருந்து என்ன முடியுமோ அதனைக்கொண்டு என்னுடைய காமராஜ் நகர் தொகுதியை மாதிரி தொகுதியாக மாற்ற வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. அந்தப் பணியை நான் தொடங்க உள்ளேன். அதனால் எனக்கு பதவி வேண்டாம். என்னால் தான் தாமதம் என்றால், என்னை விடுத்து விரைவாக அமைச்சரவையை விரிவாக்கம் செய்ய வேண்டும் எனக் கோரி துணைநிலை ஆளுநரை சந்தித்து மனு அளித்துள்ளோம். பக்கத்து மாநிலமான தமிழகத்தில் புதிய அரசு அமைந்துள்ளது. அவர்கள் உடனடியாக அமைச்சர்களை நியமித்து பணிகளை செய்ய ஆரம்பித்துவிட்டனர். அனுபவம் இல்லாதவர்கள் கூட அவரவர் துறைகளுக்கு சென்று பணிகளை செய்கின்றனர். ஆனால் பல ஆண்டுகள் அரசியலில் நின்று மிகப்பெரிய அனுபவத்துடன் இருந்தும் அமைச்சரவையை அமைக்க தாமதப்படுத்துவது மக்களுக்கு நல்லதல்ல.

வரும் காலம் மழைக் காலம். வாய்க்கால்கள் அனைத்தும் தூர்வார வேண்டும். குறிப்பாக உப்பனாறு, வெள்ளவாரி வாய்க்கால் மழையால் பாதிப்பு ஏற்படும். அந்த வாய்க்கால் தூர்வாரப்படாததால் சமீபத்தில் பெய்த மழையில் காமராஜ் நகர் தொகுதி முழுவதும் தண்ணீர் தேங்கி மக்கள் பாதிக்கப்பட்டனர். இதனை எந்த அமைச்சரிடம் சென்று கேட்பது. அரசு அதிகாரிகளிடம் கேட்டால் கடந்த முறை மழைக் காலத்தில் வேலை செய்ததற்கே பணம் கொடுக்கவில்லை. அதனால் எங்களால் செய்ய முடியாது என்று கூறுகின்றனர். இதனால் நாங்கள் எங்கள் சொந்த செலவில் அதனை சரி செய்தோம். 8 டிராக்டர் அளவில் குப்பைகள் அள்ளப்பட்டன. இதையெல்லாம் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டால் தான் அனைத்தையும் விரைந்து செய்ய முடியும். எனவே விரைவாக அமைச்சர்களை நியமிக்க வேண்டும், என்றார். தொடர்ந்து அவர் கூறும்போது, புதுச்சேரியை சிங்கப்பூராக மாற்றுவேன் என்று கூறினேன். சிங்கப்பூரில் இருந்து இன்று ஒரு குழுவினர் புதுச்சேரி, காரைக்காலை பார்வையிட வருகின்றனர். சில மாதிரிகளை அவர்கள் கொடுத்துள்ளனர். அது தொடர்பாக பேச உள்ளோம். காமராஜ் நகரை மாதிரி தொகுதியாக மாற்றுவேன் என்று சொல்லி வருகின்றேன். அதற்கான பணிகளை தொடங்கிவிட்டேன். கூடிய விரைவில் அது மாறிவிடும். தமிழகத்தில் தவெகவை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

காலச்சூழ்நிலைக்கு ஏற்ப ஒவ்வொன்றும் மாறும். இன்று இளைஞர்கள் நல்லது செய்ய வேண்டும் என்று அரசியலுக்கு வருகின்றோம். யாரும் பதவிக்கோ, பணம் சம்பாதிக்கவோ வரவில்லை. அதனால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். எங்கள் கட்சியை பலப்படுத்தும் பணியை மேற்கொண்டு வருகின்றோம். தமிழகத்திலும் எங்களின் கட்சியை தொடங்கியுள்ளோம்." என்று தெரிவித்தார்.

# பருத்தி மீதான இறக்குமதி வரியை முழுமையாக ரத்து செய்தது மத்திய அரசு

புது டெல்லி: ஜூன்.1–

பருத்தி இறக்குமதி மீதான சுங்க வரியை முழுமையாக ரத்து செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பு: இறக்குமதி செய்யப்படும் பருத்திக்கு விதிக்கப்படும் சுங்க வரி மற்றும் 'வேளாண் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கட்டணம்' (Agriculture Infrastructure and Development Cess) ஆகியவற்றில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படும். இந்த வரி ரத்து நடவடிக்கையானது, வரும் ஜூன் 1 முதல் அக்டோபர் 31 வரை அமலில் இருக்கும்.

இந்திய ஜவுளித் துறைக்கான பருத்தி இருப்பை அதிகரிக்கும் நோக்கத்தில் இந்த வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தற்காலிக வரி விலக்கு ஜவுளி மற்றும் ஆடைத் துறையில் பெருமளவில் மூலதன செலவுகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் லாபம் கிடைக்கும். மேலும், உள்நாட்டு விவசாயிகளின் நலன்களும் கருத்தில் கொள்ளப்படும். மொத்தத்தில், இந்த நடவடிக்கை உள்நாட்டு ஜவுளித் துறையில் ஈடுபட்டிருக்கும் சிறு, குறு நிறுவனங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும், சந்தையில் பருத்தியின் கையிருப்பை உறுதி செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, பருத்தி மீது 11 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.



# இறக்குமதி வரி 15% ஆக உயர்ந்ததால் தங்கத்துக்கான தேவை 70 சதவீதம் சரிவு

புதுடெல்லி: ஜூன்.1–

மத்திய அரசு தங்கம் மீதான இறக்குமதி வரியை 6லிருந்து 15% ஆக உயர்த்தியதை அடுத்து, இந்திய நகை சந்தையில் தேவை 70% வரை சரிந்துள்ளது.

மேற்கு ஆசிய போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்வு, ரூபாய் மதிப்பு சரிவு ஆகியவை அந்நியச் செலாவணி கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதை சமாளிக்க கடந்த மே 13ம் தேதி தங்கம் மீதான இறக்குமதி வரியை 6லிருந்து 15% ஆக மத்திய அரசு உயர்த்தியது. ஜிஎஸ்டி வரிகளையும் சேர்த்து தங்கம் மீதான ஒட்டுமொத்த வரிச் சுமை தற்போது 9.18% லிருந்து 18.45%ஆக உயர்ந்துள்ளது. இந்நிலையில், மே 27ம் தேதியுடன் முடிந்த 15 நாட்களில் தங்கத்தின் தேவை சுமார் 7.5 டன்னாகக் குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் சுமார் 25 டன்னாக இருந்தது. அதாவது, இறக்குமதி வரி உயர்த்தப்பட்டதால் தங்கத்தின் தேவை 70 சதவீதம் குறைந்துள்ளதாக புள்ளி விவரம் கூறுகிறது. இதுகுறித்து இந்திய தங்க நகைக் கடை உரிமையாளர்கள் சங்கத்தின் (ஐபிஜேஏ) தேசிய செயலாளர் சுரேந்திர மேத்தா கூறும்போது, "இந்தியாவின் தங்க வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 65 சதவீதத்தைக் கொண்டுள்ள ஒழுங்கமைக்கப்படாத துறை இந்த வரி உயர்வால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது" என்றார். கச்சா எண்ணெய் மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ள நிலையில், இந்த வரி உயர்வும் சேர்ந்து கொண்டதால் நுகர்வோரின் வாங்கும் ஆர்வம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழில் துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஜோயாலுக்காஸ் நிறுவன தலைவர் ஜோய் ஆலுக்காஸ் கூறும்போது, 'அதிக இறக்குமதி வரி மட்டுமே தேவையை பாதிக்கவில்லை. தங்கம் வாங்குவதைத் தற்காலிகமாகத் தவிர்க்குமாறு பிரதமர் விடுத்த வேண்டுகோளும், சுப காரியங்களைத் தவிர்க்கும் 'அதிக் மாசம்' காலமும் இந்த மந்தநிலைக்குக் கூடுதல் காரணங்களாக அமைந்துள்ளன. அத்துடன் முதலீட்டு நோக்கில் தங்கம் வாங்குவது கூட குறைந்துள்ளது' என்றார்.

# "மின் கட்டண உயர்வை பாசிட்டிவ் ஆக எடுத்துக் கொள்வீர்" உ.பி. மக்களுக்கு அமைச்சர் வேண்டுகோள்



லக்னோ: ஜூன்.1–

மாநில அரசு மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளதை மக்கள் பாசிட்டிவ் ஆக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உத்தரப் பிரதேச அமைச்சர் நரேந்திர காஷ்யப் தெரிவித்தார். மேற்காசிய போர் நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை உயர்வு மற்றும் 'எரிபொருள் மற்றும் மின் கொள்முதல் சரிசெய்தல் கூடுதல் கட்டணம்' (FPPAS) ஆகியவற்றின் காரணமாக, ஜூன் மாதத்தில் மின் கட்டணம் 10 சதவீதம் உயர்த்தப்படும் என்று உத்தரப் பிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து ஹாபூரில் செய்தியாளர்களிடம் பேசிய உ.பி. அமைச்சர் நரேந்திர காஷ்யப், "முதல்வர் யோகியின் தலைமையில், கடந்த ஒன்பது ஆண்டுகளாக உத்தரப் பிரதேசத்தில் எந்த வரிகளும் அல்லது கட்டணங்களும் உயர்த்தப்படவில்லை. ஆனால், மேற்கு ஆசியாவில் நிலவும் போர் நெருக்கடி குறித்து அனைவருக்கும் தெரியும். இத்தகைய சூழலில், அரசு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், மக்கள் அதை பாசிட்டிவ் ஆக எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

# தமிழகத்தில் நாளை 16 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை: ஜூன்.1–

கேரளம் மற்றும் தமிழக பகுதிகளில் தென்மேற்கு பருவமழை அடுத்த 4 நாட்களில் தொடங்க வாய்ப்புள்ளது. மேலும் தமிழகத்தில் நாளை 16 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்மேற்கு பருவமழை அடுத்த 4 நாட்களில் தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு அரேபியக் கடலின் மேலும் சில பகுதிகளுக்கு, லட்சத்தீவுகள், கேரளம் மற்றும் தமிழகத்தின் சில பகுதிகளுக்கும், தென்மேற்கு, மேற்கு மத்திய, கிழக்கு மத்திய மற்றும் வடகிழக்கு வங்காள விரிகுடாவின் மேலும் சில பகுதிகள், மேலும் தென்கிழக்கு வங்காள விரிகுடாவின் மீதமுள்ள பகுதிகளுக்கும் முன்னேறும் வகையில் நிலைமை சாதகமாக உள்ளது. அதனால் தமிழகம், கேரளத்தில் தென்மேற்கு பருவமழை அடுத்த 4 நாட்களில் தொடங்க வாய்ப்புள்ளது. தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு கேரளப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜூன் 1) முதல் 6ம் தேதி வரை ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளை நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம், திருச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். ஜூன் 2, 3 தேதிகளில் திருநெல்வேலி மாவட்ட மலை பகுதிகள், கன்னியாகுமரி, தென்காசி, நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, நாமக்கல், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். ஜூன் 4ம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, கோவை திருப்பூர், ஈரோடு, சேலம், திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை நாளை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டியும் இருக்கக்கூடும். தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் ஜூன் 4ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 7 செமீ, நாலுமுக்கில் 6 செமீ, காக்காச்சியில் 5 செமீ, திருச்சி மாவட்டம் தென்பரநாடு, சேலம் மாவட்டம் ஆத்தூரில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# உள்ளாட்சி தேர்தல் குறித்து, அந்த நேரத்தில் நிர்வாகக் குழு கூட்டம் கூட்டி அறிவிப்போம்: வைகோ



கும்பகோணம், ஜூன்.01–

உள்ளாட்சி தேர்தல் குறித்து, அந்த நேரத்தில் நிர்வாகக் குழு கூட்டம் கூட்டி அறிவிப்போம். அதே நேரத்தில் தற்போது திமுகவுடன் கூட்டணி தோழமை தொடர்கிறது என்று வைகோ தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்த மதிமுக பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர், “தமிழக மக்களின் ஆவேசத்திற்கு மத்திய அரசு ஆளாக நேரிடும் என்ற எண்ணம் மேகேதாட்டு விவகாரத்தில் வந்தால் அன்றி வேறு வழியில்லை. மேகேதாட்டில் அணை கட்ட அனுமதிக்ககூடாது என மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஜூன் 2ம் தேதி சென்னையில் பல்வேறு கட்சி, அமைப்புகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதே போல் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் ஜூன் 5ம் தேதி விவசாயிகள் பிரச்சினை மற்றும் 3 கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாநிலை போராட்டம் நடைபெறுகிறது.

தமிழக தற்காலிக ஆளுநர், திமிர் பிடித்து சர்வதிகாரியாக திருவள்ளுவருக்கு காவி ஆடை போர்த்தியது மன்னிக்க முடியாது. மகா அயோக்கியத்தனம். அவருக்கு காவி ஆடை போர்த்தியது திட்டமிட்டு நம்மை உசுப்பி பார்ப்பது போல் ஆணவத்துடன் செய்துள்ளார். இந்தச் செயல் தொடருமானால் ஆளுநர் எந்த மாவட்டத்திற்கு சென்றாலும் மதிமுக கருப்புக் கொடி காட்டும்.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா விவசாயம் கடினமானது என்று தான் சொல்லியிருப்பார். விவசாயத்தின் முதன்மை தன்மையை குறைத்து மதிப்பிட முடியாது. அவர் எந்தப் பின்னணியில் சொல்லியிருப்பார் எனத் தெரியவில்லை.

முதல்வர் ஜோசப் விஜய், ஆட்சிக்கு வந்து சில நாட்கள் தான் ஆகின்றன. அதிகாரத்திற்கு, அனுபவத்திற்கு அவர் புதிது. இப்போது அவர் நிர்வாகத்திற்குள் சென்ற பின்னர் தான் அனைத்து கஜானாவும் காலியாக பணமே இல்லை எனத் தெரிகிறது. அவருக்கு 6 மாதம் காலம் அவகாசம் வழங்க வேண்டும். அதுவரை விமர்சிக்க வேண்டாம்.

உள்ளாட்சி தேர்தல் குறித்து, அந்த நேரத்தில் நிர்வாக குழு கூட்டம் கூட்டி அறிவிப்போம். அதே நேரத்தில் தற்போது திமுகவுடன் கூட்டணி தோழமை தொடர்கிறது.

தமிழகத்தில் வன்முறை என்பது அனைத்து ஆட்சிகளிலும் நடைபெற்றுள்ளது. சிறு குழந்தைகளை நாசமாக்குவது தொடர்ந்து நடந்து கொண்டே வருகிறது. பாலியல் வன்முறையில் ஈடுபட்டு கொலை செய்பவர்களுக்கு பிணை விடுதலை வழங்கக் கூடாது.

அவர்களுக்கு வாழ்நாள் சிறை தண்டனை வழங்கும் விதமாக குற்றவியில் சட்டத்தை திருத்தி மாநில அரசுகள் தீர்மானம் நிறைவேற்றி, அந்த தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி, அதை சட்டமாக்க வேண்டும். இந்த சம்பவத்தில் போலீஸார் திறமையாக செயல்படுகிறார்கள். இந்த சமூகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் ஒழிக்கவேண்டும். பாலியல் குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை பெற்றுத் தர வேண்டும்.

பிரதமர் மோடி பல ஆண்டுகளாக யாரையும் சந்திப்பது இல்லை. அவரைப் போல் நகைச்சுவை செய்வதில் எந்த அரசியல்வாதிகளாலும் முடியாது. முதல்வர் ஜோசப் விஜய், செய்தியாளர்களை சந்திக்க வேண்டும், தவிர்க்க கூடாது என்பது தான் என் வேண்டுகோள் என்றார் அவர்.

# முதல்வர் ரங்கசாமி ஆன்மிகவாதியாக இருப்பதால் மக்களுக்கு என்ன நன்மை? தவெக எம்எல்ஏ



புதுச்சேரி, ஜூன்.01–

“முதல்வர் ரங்கசாமி ஆன்மிகவாதியாக இருப்பது அவருக்கு மட்டும் தான் நன்மை, மக்களுக்கு என்ன நன்மை” என்று புதுச்சேரி முன்னாள் அமைச்சரும், தவெக எம்எல்ஏவுமான சாய் ஜெ சரவணன் குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: புதுச்சேரியில் ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது. மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற போதும், தமிழகத்தில் முதல்வர் விஜய் பதவியேற்றபோதும், அவர்களுடன் அனைத்து அமைச்சர்களும் பதவியேற்றனர். ஆனால் புதுச்சேரியில் விந்தையாக உள்ளது. அமைச்சர் பதவி வழங்காமலும், அமைச்சர்களுக்கு இலாகா ஒதுக்காமலும் இருக்கிறது. புதுச்சேரி முதல்வர் ஒரு ஆன்மிகவாதி. அது அவருக்கு மட்டும் தான் நன்மை. மக்களுக்கு என்ன நன்மை.

அவர் தேசியவாதியாக இருந்தால்தான் மக்களுக்கு நன்மை, மக்களை பற்றி பேசுவார். தமிழகத்தில் விஜய் முதல்வர் பதவியேற்றார். அனைவரிமும் பொறுப்புகளை பிரித்து கொடுத்துவிட்டார். அமைச்சர்களும் பணி செய்ய ஆரம்பித்து விட்டனர். பிரதமர் உள்ளிட்டோரை சந்தித்து கேட்க வேண்டியதை கேட்டுவிட்டு வந்துள்ளார். ஆனால் புதுச்சேரியில் எந்தவிதமான வேலைகளும் நடக்க வில்லை. அமைச்சர்களுக்கு இலாகா ஒதுக்கினால் தான் தொகுதிக்கு தேவையானதை சம்மந்தப்பட்ட அமைச்சரை சந்தித்து கேட்க முடியும்.

திருபுவனை தொகுதி சிறியது. இங்கு 21 ரெஸ்டோ பாருக்கு அனுமதி கொடுத்துள்ளனர். அது எதனடிப்படையில் கொடுத்துள்ளீர்கள் என்று கேட்க வேண்டும். அதனை யாரிடம் கேட்பது. முதல்வர் எந்த அமைச்சரையும் நியமிக்கவில்லை. எந்த துறையும் யாருக்கும் ஒதுக்கவில்லை, எல்லாவற்றையும் நான்தான் பார்க்கின்றேன் என்று தெளிவாகச் சொல்ல வேண்டும்.

அப்படி சொல்ல விட்டால் அவரையே நாங்கள் நேரடியாக பார்த்து கேட்போம். அரசு கல்வி நிறுவனங்கள் தரம் குறைக்கப்பட்டுள்ளது. ஆட்சியாளர்களின் பினாமியாக பல பள்ளி, கல்லூரிகள் செயல்படுகின்றன. அங்கு லட்ச கணக்கில் கல்வி கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தனியார் கல்வி நிறுவ னங்களில் வசூலிக்கப்படும் கல்வி கட்டணம் குறித்து துணைநிலை ஆளுநர் தலையிட்டு கண்காணிக்க வேண்டும். பெற்றோர் தன்னுடைய ஊதியத்தில் இருந்து 37 சதவீதம் பிள்ளைகளின் கல்விக்காக செலவிடுகின்றனர். அதற்கு கடன் வாங்கி கஷ்டப்படுகின்றனர்.

இதனை யார்தான் கேட்பது. கேட்க வேண்டிய எம்எல்ஏக்களுக்கு சட்டப்பேரவையில் அறைகூட ஒதுக்கப்படவில்லை. அதிகாரிகளே ஆட்சி செய்தவற்கு தேர்தல் எதற்கு?. புதுச்சேரி சட்டக்கல்லூரி 1974ல் தொடங்கப்பட்டது. இதில் 60 இடங்கள் மட்டுமே அன்றுமுதல் இன்றுவரை உள்ளது. அதை ஏன் உயர்த்துவதில்லை.

முதல்வர் டென்னிஸ் விளையாடுகிறார். அது அவரது உடல் நலத்தை பாதுகாக்க. அதுபோன்று மக்கள் நலனுக்கு பிரதமரை சந்தித்து கேட்க வேண்டியதை எல்லாம் அவர் கேட்க வேண்டும். புதுச்சேரி மாநில அந்தஸ்து வேண்டும் என்று எத்தனையோ ஆண்டுகளாக கேட்டு கொண்டிருக்கின்றனர்.

40 எம்பிக்களை வைத்திருந்த திமுக அதன் கூட்டணி கட்சிகள் கூட இதனை கேட்கவில்லை. ஆனால் தவெக முதல் ஆளாக நாடாளுமன்றத்துக்கு செல்லும்போது கண்டிப்பாக புதுச்சேரிக்கான மாநில அந்தஸ்தை கேட்கச் சொல்வோம். அடுத்த வாரம் தமிழக முதல்வரை சந்திக்க நேரம் கேட்டுள்ளோம். அவரிடம் இதையெல்லாம் எடுத்துச் சொல்வோம்.

ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் தங்களுக்கான பணிகளை செய்ய வேண்டும். பொழுதை கழிப்பதற்கான இடம் புதுச்சேரி அல்ல. தமிழகத்தில் முதல்வர் கோயில், பள்ளி, கல்லூரி அருகில் இருந்த மதுக்கடைகளை அகற்றி விட்டார். அதேபோல் புதுச்சேரி முதல்வர் செய்வதாரா என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்களுக்கு இடையூறாக இருக்கின்ற மதுக்கடைகள், ரெஸ்டோ பார்களை உடனடியாக அகற்ற வேண்டும். முதல்வர் ரங்கசாமி உடனடியாக அமைச்சர்களை நியமிக்க வேண்டும்.

அவர் கண்டிப்பாக டெல்லி சென்று பிரதமரை சந்தித்து கேட்க வேண்டியதை கேட்க வேண்டும். பெற வேண்டியதை பெற்று வர வேண்டும். இல்லாவிட்டால் வரும் காலங்களில் தவெக போராட்டங்களை கையில் எடுக்கும். என்றார்.

அப்போது, லஜக தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் எம்எல்ஏவால் தான் அமைச்சர்கள் நியமனம் தாமதமாவதாக சொல்லப்படுவது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர், அதற்கு, “ஜோஸ் சார்லஸ் மார்டின் காமராஜ் நகர் தொகுதியை சிங்கப்பூராக மாற்றுவேன் என்று கூறியுள்ளார். அவர் மாற்றட்டும் அப்புறம் பார்ப்போம்,” என சாய் ஜெ சரவணன்குமார் தெரிவித்தார்.



# கடற்கரை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தட மின்சார ரயில் இயக்கத்தில் புதிய கால அட்டவணை

சென்னை, ஜூன்.01–

சென்னை கடற்கரை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் மின்சார ரயில்கள் இயக்கத்தில் புதிய கால அட்டவணை இன் (ஜூன் 1) முதல் அமல்படுத்தப்படுகிறது.

சென்னை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் புதிய கால அட்டவணை ஜூன் 1ம் தேதி (நாளை) முதல் அமல்படுத்தப்பட உள்ளது. தற்போது இயக்கப்படும் 212 மின்சார ரயில்களின் சேவை அப்படியே தொடரும். ஆனால், ரயில்களின் இயக்கும் நேரத்தில் மட்டும் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: சென்னை தாம்பரம், செங்கல்பட்டு, திருமால்பூர் வழித்தடத்தில், புதிய கால அட்ட வணைப்படி, அலுவலக நாட்களில் 212 மின்சார ரயில்களும், விடுமுறை நாட்களில் 190க்கும் மேற்பட்ட மின்சார ரயில்களும் இயக்கப்படும். இயக்ககக் காரணம் மற்றும் எழும்பூர் ரயில் நிலைய மறு சீரமைப்பு பணி ஆகியவை காரணமாக, இந்த புதிய கால அட்டவணை அமல்படுத்தப்பட உள்ளது.

மேலும், பயணிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, நெரிசல் மிகுந்த நேரங்களில் (பீக் அவர்ஸ்) இடைவெளி நேரம் குறைக்கப்பட்டுள்ளது. மற்ற நேரங்களில் 15 நிமிட இடைவெளியில் இயக்கும் வகையில் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதுகுறித்து, புறநகர் மின்சார ரயில் பயணிகள் கூறும்போது, “செங்கல்பட்டு தாம்பரம் கிண்டி கடற்கரை வரை காலை வேளையில் அதாவது பீக் அவர்ஸில் இயக்கப்படும் மின்சார ரயில்கள் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், போதிய மின்சார ரயில் சேவை கிடைக்காமல், பணிக்கு செல்லும் பயணிகள் பாதிக்கப்படு வார்கள். சென்னை புறநகரில் மின்சார ரயில்களின் தேவை பல மடங்கு அதிகரித்து வருகிறது. இந்த அட்டவணையில் கூடுதல் ரயில்கள் இல்லாதது, ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது” என்றனர்.

# மகளிருக்கு ரூ.2,500 வழங்குவது எப்போது? அமைச்சர் விளக்கம்



நாகப்பட்டினம், ஜூன்.01–

மகளிர் உரிமைத் தொகையாக மாதம் ரூ.2,500 வழங்குவது எப்போது என நிதி அமைச்சர் மரிய வில்சன் பதில் அளித்துள்ளார்.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலயத்தில் வழிபாடு நடத்துவதற்காக தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன் நேற்று வந்திருந்தார். அப்போது அவர் பேராலயத்தில் பிரார்த்தனை செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தின் நிதிநிலை குறித்து இன்னும் 2 வாரங்களில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட உள்ளது. மதுரை மாநகராட்சி ஊழல் தொடர்பாக முழு அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அதேபோல, அனைத்து தணிக்கை அறிக்கைகளும் கேட்கப்பட்டுள்ளன. மகளிர் உரிமைத் தொகை வட மாநில பெண்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்த உத்தர விடப்பட்டுள்ளது. மகளிர் உரிமைத் தொகையை மாதம் ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்குவது தொடர்பாக பட்ஜெட்டில் தெரிவிக்கப்படும்.

கடந்த 2024ல் பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக ரிசர்வ் வங்கி சில விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. கடந்த திமுக ஆட்சி காலத்தின்போது இத்தகைய விதிமுறைகள் எதுவும் இல்லை. எனவே ரிசர்வ் வங்கியின் விதிகளை பின்பற்றித் தான் விவசாயக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொடர்ந்து ஆலோசனை நடைபெற்று வருகிறது. இந்தியா ஒரு ஜனநாயக நாடு. யார் வேண்டுமானாலும் எந்தக் கட்சியில் வேண்டுமானாலும் இணைவதற்கு முழு உரிமையும் அவர்களுக்கு உண்டு. இவ்வாறு அமைச்சர் மரிய வில்சன் தெரிவித்தார்.



# வீடுகள் ஒதுக்கீட்டில் குளறுபடி என புகார்: கோட்டூர்புரத்தில் பொதுமக்கள் சாலை மறியல்

சென்னை, ஜூன்.1–

கோட்டூர்புரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி, நூற்றுக்கணக்கானோர் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

கோட்டூர்புரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பக்கிங்காம் கால்வாய் கரையோரப் பகுதிகளில் வசித்துவந்த நூற்றுக்கணக்கான எளிய மக்களின் வீடுகள், நீர்நிலை ஆக்கிரமிப்பு அகற்றம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இடிக்கப்பட்டன. அப்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதே பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என அரசு தரப்பில் உறுதி அளிக்க ப்பட்டது.

அதன்படி, கடந்த திமுக அரசு சார்பில் ரூ.307 கோடி மதிப்பீட்டில் சுமார் 1,800 புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு. வீடுகள் ஒதுக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தற்போது அந்த குடியிருப்பில் 195 வீடுகள் காலியாக உள்ளன.

இந்த வீடுகளைத் தங்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரி கோட்டூர்புரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் வசிக்கும் நூற்றுக்கணக்கானோர் நேற்று சாலை மறியலில் ஈடுபட்டனர். இடிந்து விழும் நிலையில் உள்ள தங்கள் வீடுகளைக் காலி செய்து விட்டு, காலியாக உள்ள புதிய குடியிருப்புகளில் தங்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் செய்தியாளர்களிடம் கூறும்போது, “முந்தைய அரசில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் எங்களுக்கு வீடு ஒதுக்கப்பட்டதாகக் கூறினார். ஆனால் தற்போது அதிகாரிகள் எங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என கூறுகின்றனர்.

இப்போதுள்ள அமைச்சரிடம் கேட்டாலும் முறையான பதில் இல்லை. பல குடும்பங்கள் பல தலைமுறைகளாக வசித்து வருகின்றன. தற்போது, நாங்கள் வசிக்கும் குடியிருப்புகள் மிகவும் சிதிலமடைந்து, சுவர்கள் மற்றும் மேற்கூரைகள் எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாயகரமான நிலையில் உள்ளன. இதுமட்டுமின்றி, இப்பகுதியில் பாதாளச் சாக்கடை வசதி மற்றும் குடிநீர் விநியோகம் போன்ற அடிப்படைத் தேவைகளும் முற்றிலும் சீர்குலைந்துள்ளன” எனக் கூறினர். சாலை மறியல் குறித்த தகவல் அறிந்ததும், போலீஸார் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், எங்களுக்கு எழுத்துப்பூர்வமான ஒதுக்கீட்டு ஆணை கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனப் பிடிவாதமாக மக்கள் சாலை யில் அமர்ந்தனர்.

இதையடுத்து காவல்துறையினர் போரா ட்டத்தில் ஈடுபட்ட வர்களை வலுக்கட்டாயமாக கைது செய்ய முயன்றபோது, போலீஸாருக்கும் மக்களுக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதன் காரணமாக 5 கி.மீ தொலைவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், “உரிமைகளுக்காகப் போராடும் மக்களுக்கு பதில் சொல்ல வேண் டிய அமைச்சரும், எம்எல்ஏவும் வராமல் காவல் துறையை பயன்படுத்தி அவர்களை ஒடுக்க நினைப்பது சர்வாதிகாரப் போக்காகும்“ என்றார்.




# தவெகவுக்கு ஆதரவு ஏன்? காதர் மொகிதீன் விளக்கம்

கடலூர், ஜூன்.01–

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி அல்லது திருமாவளவனை முதல்வராக்க திமுக முயற்சி செய்தது. ஆனால் மக்கள் விஜய்க்கு வாக்களித்த நிலையில் மாற்று ஏற்பாடுகள் என்பது ஜனநாயகத்துக்கு ஏற்புடையதாக இருக்காது என்பதால் தவெக அரசு அமைய ஆதரவு அளித்தோம் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியதலைவர் காதர்மொகிதீன் விளக்கம் அளித்துள்ளார்.

கடலூர் பரங்கிப்பேட்டையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியது: தேர்தல் பிரசாரத்தின்போதே பெண்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் மாற்றத்துக்கான மனநிலை இருப்பதாக திமுகவிடம் தெரிவித்தோம், ஆனால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

அதிமுக எம்எல்ஏக்கள் பதவியை ராஜினாமா செய்த பிறகே கட்சி மாறியுள்ளனர், இதை ‘கட்சி உடைப்பு’ என்று கூற முடியாது. திமுகவுடனான எதிர்கால உறவு குறித்து 20ம் தேதி நடைபெறும் பொதுக்குழுவில் முடிவு எடுக்கப்படும். தீய சக்தியை தூய சக்தியாக மாற்றும் முயற்சியை விஜய் மேற்கொண்டுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# கரும்பு கட்டுப்பாடு சட்டம் 2026 ரத்து; விவசாயிகளின் போராட்டங்களுக்கு கிடைத்த வெற்றி: கரும்பு விவசாயிகள் சங்கம் பெருமிதம்

சென்னை, ஜூன்.01–

‘கரும்பு கட்டுப்பாடு சட்டம் 2026ஐ மத்திய அரசு ரத்து செய்திருப்பது, விவசாயிகளின் போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றி’ என தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் டி.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கரும்பு கட்டுப்பாடு சட்டம் 1966க்கு மாற்றாக, கரும்பு கட்டுப்பாடு சட்டம் 2026 ஐ மத்திய பாஜக அரசு முன்மொழிந்தது.

இந்த சட்டத்தின் மூலம் 12.25 சதவீத பிழிதிறனுக்கு கரும்பு விலை நிர்ணயிக்கப்படும், சர்க்கரை விற்பனை விலையோடு கரும்புக்கான விலை இணைக்கப்படும், சர்க்கரை ஆலைகள் நட்டம் என்று கருதினால் மாநில அரசின் ஒப்புதலோடு கரும்பு விலையை குறைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும் என்பன உள்பட கரும்பு விவசாயிகளுக்கு விரோதமாகவும் சர்க்கரை ஆலைகளுக்கு ஆதரவாகவும் ஷரத்துகள் இடம் பெற்றிருந்தன.

நாடு முழுவதும் உள்ள 5 கோடி கரும்பு விவசாயிகளுக்கு விரோதமாக மத்திய அரசு முன்மொழிந்த இச்சட்டத்தை முற்றிலுமாக மாற்றியமைக்க வேண்டும் என்று அகில இந்தியகரும்பு விவசாயிகள் சம்மேளனம், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கங்கள் வலியுறுத்தின. நாடு முழுவதும் ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக மத்திய பாஜக அரசு முன்மொழிந்த கரும்பு கட்டுப்பாடு சட்டம் 2026 ஐ ரத்து செய்து நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டுள்ளது. இது விவசாயிகளின் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

இனியாவது, கரும்பு விவசாய பிரதிநிதிகளிடம் முழுமையான விவாதத்தை நடத்தி கருத்துகளைக் கேட்டறிந்து கரும்பு கட்டுப்பாடு சட்டம் 1966ல் தேவையான திருத்தங்களை மத்திய அரசு செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# "நானும் வந்துட்டேன்!" விஜய் கட்சியில் ஐக்கியமான தென்காசி தெற்கு மாவட்ட அமமுக பட்டாளம்!

தென்காசி, ஜூன்.1-
தென்காசி அரசியல் களத்தில் பரபரப்பைக் கூட்டும் வகையில், தென்காசி தெற்கு மாவட்ட அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தை (அமமுக) சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகி ஒருவர், தமிழக வெற்றி கழகத்தில் (தவெக) தங்களை அதிரடியாக இணைத்துக் கொண்டுள்ளனர்.தென்காசி தவெக மத்திய மாவட்ட கழக செயலாளர் ராஜ பிரகாஷ் முன்னிலையில் நடைபெற்ற இந்த இணைப்பு விழாவில், அமமுகவைச் சேர்ந்த மாவட்ட அவைத்தலைவர் பி.எச். இப்ராஹிம்ஷா, தென்காசி நகர செயலாளர் வில்சன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் வேலம்மாள், மாவட்ட இளைஞரணி பாசறை செயலாளர் சுபா, ஜானகி, சிறுபான்மை பிரிவு செயலாளர் சாகுல் ஹமீது, மேலகரம் பேரூர் கழக செயலாளர் கல்யாண சுந்தரம், மாவட்ட வார்டு செயலாளர் மிக்கேல், மற்றும் கண்ணன், சதீஷ்குமார் ஆகியோர் தவெகவில் இணைந்தனர். இவர்களுடன் திமுக இலக்கிய அணி செயலாளர் மிராசு என்பவரும் திமுகவிலிருந்து விலகி தவெகவில் ஐக்கியமானார்.இந்நிகழ்ச்சியில் தென்காசி தமிழக வெற்றி கழகத்தின் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகி கள் பலர் திரளாகக் கலந்து கொண்டு புதியவர்களை வரவேற்றனர்.

# "நாளைக்கே தேர்தல் வந்தாலும் தவெக தோற்கும்!" திருப்பூர் புதிய அதிமுக செக்ரட்டரி சிவசாமி அதிரடி அட்டாக்!



திருப்பூர், ஜூன்.1-
திருப்பூர் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளராகப் புதிய பொறுப்பேற்றுள்ள முன்னாள் எம்பி சிவசாமி, திருப்பூர் ஆண்டிபாளையம் பகுதியில் கட்சி நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசினார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் அதிரடியான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.
"மக்கள் ஏதோ ஒரு மாயையிலும் சோசியல் மீடியா தாக்கத்திலும் ஏமாந்து வாக்களித்துவிட்டு இப்பொழுது ஆதங்கத்தில் உள்ளனர். நாளைக்கே தேர்தல் நடந்தாலும் தவெக தோற்கும், அதிமுகதான் மாபெரும் வெற்றி பெறும். ஒவ்வொரு கட்சியாகத் தாவிச் சென்ற ஆதவ் அர்ஜுனா ஒரு அரசியல் தற்குறி. அவர் அறியாமையில் பேசி வருகிறார்" என்று மிகக் காரசாரமாக விமர்சித்தார். மேலும், "விஜய் தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்தார், ஆனால் எடப்பாடியாரைச் சந்திக்கவில்லை. ஒரு தரப்பை மட்டும் சந்திப்பது ஏமாற்று வேலை" எனக் குறிப்பிட்ட அவர், அதிகாரிகளைக் கையாளும் திறன் இல்லாததே தற்போதைய சட்ட ஒழுங்கு சீர்கேட்டிற்குக் காரணம் என்றார். வரவிருக்கும் மாநகராட்சி தேர்தலில் அதிமுக பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி மாஸ் காட்டும் என்றும் அவர் சபதம் ஏற்றார்.இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கரைப்புதூர் நடராஜ் மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் பலர் திரளாகப் பங்கேற்றனர்.



# புளியங்குடி சொக்கலிங்க சுவாமி கோயில் தேரோட்டம் கோலாகலம்! வடம் பிடித்த ராஜா எம்எல்ஏ - ஆயிரக்கணக்கான பக்தர்கள்!

புளியங்குடி, ஜூன்.1-
நெல்லை புளியங்குடி சிந்தாமணி ஸ்ரீ சொக்கலிங்க சுவாமி கோயிலில், புகழ்பெற்ற வைகாசி பிரம்மோற்சவ திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் பக்தி பரவசத்துடன் கோலாகலமாக நடைபெற்றது.கடந்த 21ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்த 10 நாள் திருவிழாவின் 9வது நாளான நேற்று, சிறப்பு அலங்காரத்தில் சுவாமி தேரில் எழுந்தருளினார். தொடர்ந்து நடைபெற்ற தேரோட்டத்தைத் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்.எல்.ஏ, நகராட்சி சேர்மன் விஜயா சவுந்திர பாண்டியன், துணை சேர்மன் அந்தோனிசாமி மற்றும் தவெக மாவட்டச் செயலாளர் மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'அரோகரா' முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்து நிலை சேர்த்தனர். கோடை வெப்பத்தைத் தணிக்க வீதிகள் முழுவதும் தண்ணீர் தெளிக்கப்பட்டு, பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் நீர்மோர் வழங்கப்பட்டன.இந்நிகழ்வில் தவெக நிர்வாகிகள், திமுக நகர கிழக்கு பகுதி செயலாளர் நாகூர்கனி, வழக்கறிஞர் அணி பிச்சையா, நகராட்சி கவுன்சிலர்கள், அனைத்து சமுதாய நாட்டாண்மைகள் மற்றும் செயல் அலுவலர் தங்கமாரி, ஆய்வாளர் சரவணகுமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இன்ஸ்பெக்டர் ஷியாம் சுந்தர் தலைமையில் போலீசார் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

# வீடுகளுக்குள் புகும் சாக்கடை நீர்!" "தெரிஞ்சதைப் பாத்துக்கங்கன்னு சொல்றாங்க

## தச்சம்பத்து கிராம மக்களின் குமுறலும். பாஜக கணேசனின் அதிரடி முழக்கமும்



சோழவந்தான், ஜூன்.1-
மதுரை மாவட்டம் தேனூர் அருகே உள்ள தச்சம்பத்து கிராமத்தில் சாக்கடை கழிவுநீர் முறையாக வெளியேறாமல் அடைப்பு ஏற்பட்டு, வீடுகளுக்குள் புகுந்து வருவதால் ஒட்டுமொத்தக் கிராமமும் கடுமையான சுகாதாரக் கேட்டில் சிக்கித் தவித்து வருகிறது. இதனால் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் தொற்று நோய் அபாயத்தில் உள்ளதாகப் பொதுமக்கள் கண்ணீருடன் வேதனை தெரிவிக்கின்றனர்.
பலமுறை புகார் அளித்தும் தற்காலிகமாக மட்டுமே சுத்தம் செய்யப்படுவதாகவும், இதுகுறித்து ஊராட்சி நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பினால், "தண்ணீர் திறந்து விட முடியாது, தெரிந்ததைப் பாருங்கள்" என அலட்சியமாகப் பதிலளிப்பதாகவும் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். மேலும், ஆற்றங்கரை ஓரத்தில் இருந்தும் இக்கிராமத்திற்கு மட்டும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்படுவதாகவும், அதுவும் முறையாகப் பயன்பாட்டிற்கு வருவதில்லை என்றும் புகார்கள் எழுந்துள்ளன. இப்பிரச்சனைக்கு மாவட்ட நிர்வாகம் உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் தலையிட்டு நிரந்தர தீர்வு காண வேண்டும் எனச் சமூக ஆர்வலரும், பாஜக சமயநல்லூர் ஒன்றிய தலைவருமான கணேசன் மிகக் கறாராகக் கோரிக்கை விடுத்துள்ளார்.



# "மனிதநேயமே மகத்தானது!" மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளையின் நெகிழ்ச்சியான நற்பணி!

ஜூன் 01-
இந்திய மருத்துவச் சங்கம் மற்றும் ரோட்டரி கிளப் ஆகியவை இணைந்து நடத்திய ரத்ததான முகாமில், மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை சார்பாக அதன் நிறுவனத் தலைவர் கே. வினோத்குமார் தலைமையில் நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்துகொண்டு ரத்ததானம் வழங்கினர்.சமூக நலனைக் கருத்தில் கொண்டு ரத்ததானம் வழங்கிய மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளையின் அனைத்து நிர்வாகிகளையும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும், தலா ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள விபத்துக் காப்பீட்டு (Accident Insurance) பத்திரங்களும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. இவர்களின் இந்த உன்னத மனிதநேயப் பணி பலரது பாராட்டுகளையும் பெற்று வருகிறது.ஒரு உயிரைக் காக்கும் உன்னதக் கொடை ரத்ததானம்! அதை வெறும் கடமையாகச் செய்யாமல், ரத்ததானம் வழங்கிய நிர்வாகிகளின் பாதுகாப்பைக் கருதி ஒரு லட்சம் ரூபாய் விபத்துக் காப்பீடும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிய இந்தச் செயல் மிக உன்னதமானது.




# "கல்விப் பணிக்குக் கிடைத்த கம்பீர விடைபெறுதல்!" பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா!

சங்கரன்கோவில், ஜூன்.1-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் என்.ஜி.ஓ. காலனியில் உள்ள சாலமோன் இல்லத்தில், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பின் சார்பில் இந்த ஆண்டு பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கான பிரம்மாண்ட பாராட்டு விழா மாவட்டத் தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில், கல்வித்துறையில் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் மனோகரன் சாமுவேல், ஆசிரியர்கள் செந்தூர் பாண்டியன், ஜோஸ் மேத்யூ, இளங்கோ கண்ணன் மற்றும் ஜெபராணி ஆகியோர் பொன்னாடை அணிவித்துச் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டனர். முன்னதாக, கூட்டமைப்பின் மாவட்டச் செயலாளர் சாலமோன் அனைவரையும் வரவேற்றார். விழாவின் நிறைவில், பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் தங்களது பணிக்கால அனுபவங்களையும் நெகிழ்ச்சியான நினைவுகளையும் பகிர்ந்து கொண்டது அங்கிருந்தோரை உருக வைத்தது.இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டச் செயலாளர் வேல்முருகன், ஆசிரியர்கள் நாகராஜ், மாரியப்பன், மாரித்துரை, சந்திரசேகர், இசக்கியம்மாள், பொன்னரசி, பொன்மலர் மற்றும் ஆசிரியர்களின் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மாவட்டப் பொருளாளர் கற்பகம் நன்றி உரையாற்றினார்.



# தியாகதுருகத்தில் திரண்ட தமிழ்ச் சான்றோர்கள்! பாரதியார் தமிழ்ச் சங்கம் நடத்திய பிரம்மாண்ட ஐம்பெரு விழா!

கள்ளக்குறிச்சி, ஜூன்.1-
கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகத்தில், பாரதியார் தமிழ்ச் சங்கம் சார்பில் பிரம்மாண்ட ஐம்பெரு விழா நடைபெற்றது. தமிழறிஞர் ராபர்ட் கால்டுவெல் பிறந்தநாள், சர்வதேச அன்னையர் நாள், சர்வதேச செவிலியர் நாள், தொழிலாளர் நாள் மற்றும் குடும்ப நாள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, தமிழ் இலக்கியத் தொடர் சொற்பொழிவுடன் இவ்விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.வாசவி மெட்ரிக் பள்ளி ஆசிரியை அ.தமிழரசி தலைமையில், ஆசிரியை க.விஜயகுமாரி, நூலகர் கலைமகள் காயத்ரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் ராபர்ட் கால்டுவெல்லின் தமிழ்த்தொண்டு, தொழிலாளர் நாள், அன்னையர் நாள், சர்வதேச குடும்ப நாள் (பேசியவர்கள்: ஆசிரியர் து.திலகவதி, முனைவர் ம. கவிதா) மற்றும் திருக்குறள் உரை குறித்துப் பல்வேறு சிந்தனையாளர்களும், தமிழறிஞர்களும் நெகிழ்ச்சியாக உரையாற்றினர். மேலும், தமிழாசிரியர் ஆ. ராமானுஜம் தலைமையில் "அன்னையைப் போற்றுவோம்" என்ற தலைப்பில் கவியரங்கமும் நடைபெற்றது.சிறப்பு அழைப்பாளராக அகவை முதிர்ந்த தமிழறிஞர் நலச்சங்க மாநில துணைத் தலைவர் சோளிங்கர் த.பழனி கலந்துகொண்டு, சிறப்பிடம் பெற்ற மாணவர்கள் மற்றும் சிறந்த தமிழறிஞர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார். தமிழ்ச் சான்றோர் இரா. பொன்னப்பிள்ளை, ரிஷிவந்தியம் அரசு கலைக் கல்லூரி உதவி பேராசிரியர் மாரி.செல்வராசு, தமிழ்ச் சங்கப் புரவலர் சீனு.முரளி, ரிஷிவந்தியம் தமிழ்ச் சங்க நிறுவனர் வ. ராசாகோபால் உட்படப் பலர் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினர். நிறைவாகப் பாரதியார் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் இரா.துரைமுருகன் நன்றி கூறினார்.*சக்கர வியூகம் வாய்ஸ்:*
மேலைநாட்டிலிருந்து வந்து தமிழுக்குத் தொண்டாற்றிய ராபர்ட் கால்டுவெல் முதல் நம்மைப் பெற்றெடுத்த அன்னை, உழைக்கும் வர்க்கம், நம் உயிர் காக்கும் செவிலியர்கள் மற்றும் குடும்ப அமைப்பைப் போற்றும் விதமாக ஐந்து விழாக்களையும் ஒரே மேடையில் அர்த்தமுள்ளதாக மாற்றிய தியாகதுருகம் பாரதியார் தமிழ்ச் சங்கத்தின் முயற்சி அற்புதம்! தமிழ் அறிஞர்களையும், கல்லூரிப் பேராசிரியர்களையும் கௌரவிப்பதோடு, அடுத்த தலைமுறை மாணவர்களையும் விருதுகள் வழங்கி ஊக்குவித்திருப்பது பாராட்டுக்குரியது. இந்த இலக்கியப் பணிகள் தியாகதுருக மண்ணில் இன்னும் தொடர வேண்டும் என்பதே சக்கர வியூகத்தின் கறாரான பார்வை.

# வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க முதல்வர் விஜய் திருச்சி வருகை

திருச்சி கிழக்கு தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக, தவெக தலைவரும், முதல்வருமான விஜய் நாளை (ஜூன் 1) திருச்சி வருகிறார். தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தலைவர் விஜய் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார். இதையடுத்து அவர், பெரம்பூர் தொகுதியை வைத்துக் கொண்டு, திருச்சி கிழக்குத் தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக முதல்வர் விஜய் நாளை (ஜூன் 1) திருச்சி வருகிறார்.இதுகுறித்து தவெக டெல்டா மண்டல பொறுப்பாளரும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைவருமான கு.ப.கிருஷ்ணன் திருச்சியில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியது: தவெக தலைவர் விஜய், தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக திருச்சி வருகை தருகிறார்.இதற்காக சென்னையிலிருந்து தனி விமானத்தில் திருச்சி விமான நிலையம் வரும் முதல்வர், அங்கிருந்து டிவிஎஸ் டோல்கேட், பழைய பால்பண்ணை, சஞ்சீவி நகர், சத்திரம் பேருந்து நிலையம் வழியாக தனியார் கல்லூரி வளாகத்துக்கு வருகிறார். பின்னர், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் மாலை 4 மணியளவில் பொதுமக்கள் மத்தியில் நன்றி தெரிவித்துப் பேசுகிறார். இந்த நிகழ்வைத் தொடர்ந்து தமிழகத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் செல்ல இருக்கிறார். முதல்வர் விமான நிலையத்திலிருந்து விழா நடைபெறும் இடத்துக்கு வாகனத்தில் வரும்போது, அவரது வாகனத்தை யாரும் பின் தொடர வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.அப்போது, பேரவைத் துணைத்தலைவர் எம்.ரவிசங்கர் உடன் இருந்தார். திருச்சி வரும் முதல்வர் விஜய்க்கு, திருச்சி விமான நிலையத்திலிருந்து கூட்டம் நடைபெறும் இடம்வரை சாலையின் இருபுறங்களிலும் வரவேற்பு அளிக்க தவெகவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்






SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000